**வத்தள பிரதேச சபை**

**கம்பஹா மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 23 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 29 இல் சபையின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து வத்தள பிரதேச சபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுகள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் நூலகத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களின் பெறுமதியான ரூபா 25,000 கணக்குகளிற்கு கொண்டுவரப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் பொது சேவை வழங்கும் சென்மதியாளர்களுக்கு ரூபா 18,800 கூடுதலாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) சபையில் 2015 ம் ஆண்டில் 05 நான்கு சில்லுகளுடனான உழவு இயந்திரமும் 02 லான் மாஸ்ரரும் ரூபா 7,320,485 க்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் இந்த 07 உழவு இயந்திரமும் பதிவு செய்வதற்காக முறையே ரூபா 79,900 மற்றும் ரூபா 13,960 உம் கொள்வனவு செய்த நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அந்தத் தொகை மூலதனமாக்கப்படாமல் நடைமுறைச் செலவினமாக பதிவளிக்கப்பட்டிருந்தது.

(ஈ) தலைமை அலுவலகம் கட்டடத்தொகுதிக்கு ரூபா 419,599 க்கு கொள்வனவு செய்த 05 குளிரூட்டி பொருத்துவதற்கு தேவையான உபகரணம் கொள்வனவு செய்வதற்கு ரூபா 84,864 செலவு செய்யப்பட்டு அது மூலதனமாகக்கப்படாமல் நடைமுறைச் செலவினத்தினுள் பதிவளிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 நிகழத்தக்க பொறுப்பு

மீளாய்வாண்டு திசெம்பர் 31 க்கு சபைக்கு எதிராக 03 நீதி மன்ற வழக்கும், சபையினால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்ட 02 வழக்குமான மொத்தம் 05 வழக்குகளுக்கும் நீதி மன்றில் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கப்படுகின்றது. இவ் வழக்குக்கான சட்டக்கட்டணமாக மீளாய்வாண்டில் ரூபா 304,650 கொடுப்பனவு செய்திருந்தது. இந்த வழக்கில் ஊழியர் சேமலாப நிதி செலுத்தப்படாமையினாலும், மற்றும் வியாபார அனுமதிப்பத்திரம் கொடுக்காமையினாலும் இவ் வழக்குகள் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தமையால் இது சம்மந்தமாக வரும் பொறுப்புக்காக நிகழத்தக்க பொறுப்புக்கு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கூட்டுமொத்த தொகையான ரூபா 120,101,222 பெறுமதியான நடவடிக்கைகளுக்கான தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாமையினால் முறையாக கணக்காய்வு செய்ய முடியாதுள்ளது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 28,449,889 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும் போது நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 60,537,699 ஆக விளைந்திருந்தது.

### 2.2 நிதி கட்டுப்பாடு

2015 யூன் 8 ஆந் திகதி 10,000,000 பெறுமதியான நிலையான வைப்பு மற்றும் 2013 ஆண்டில் இருந்தவாறான கூட்டுமொத்த தொகை ரூபா 2,669,150 பெறுமதியான 4,7 நாட்களுக்கான நிலையான வைப்புக்களுக்காகவும் கூட்டுமொத்தம் ரூபா 12,669,150 ஆக 7 நாட்கள் நிலையான வைப்புக்காக போடப்படாது சில காலத்திற்கு நிலையான வைப்பு செய்யப்பட்டிருந்தால் அது சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் காணப்படும்.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மை வருமானம் மற்றும் கிடைக்கவேண்டிய வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், கிடைக்கவேண்டிய வருமானம் என்பவற்றின் விபரம் வருமாறு

| வருமான விடயம் | பாதீடு (ரூபா) 000' | உண்மை (ரூபா) 000' | டிசெம்பர் 31 மொத்த நிலுவை (ரூபா) 000' |
|---|---|---|---|
| ஆதனவரி | 87,098 | 76,603 | 96,470 |
| வாடகைகள் | 5,841 | 5,380 | 7,419 |
| வியாபார உரிமங்கள் | 2,266 | 2,448 | 785 |

2015 ஆம் ஆண்டில் எதிர்வுகூறப்பட்ட பிரதான வருமானம் ஆதனவரி, வியாபார உரிமங்கள் மற்றும் கடை வாடகைகள் ஆகிய வாடகை எதிர்வுகூறப்பட்ட அளவு அறவிடுவதற்கும் கிடைக்கவேண்டிய வருமானம் அறவிடுவதற்கும் சபை தவறியுள்ளது.

#### 2.3.2 ஆதன வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

**(அ)** 2008 ஆண்டிற்கு பின்னர் விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் சொத்து விலை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. 3 உப அலுவலகத்திற்கு சொந்தமாக ஆதன வரி அலகு 62179 காணப்பட்ட போதிலும் வருமான நிர்வாகியினால் 103 சொத்துக்கள் தற்காலிகமாக விலைமதிப்பீடு செய்திருந்தது.

**(ஆ)** சட்டப்படியாக அறவிடப்படமுடியாதுள்ள கந்தல உபஅலுவலகத்திற்கு சொந்தமான 2008 ஆம் ஆண்டில் இணங்காணப்பட்ட ஆதனவரி அலகு 1276 ற்கு கிடைக்கவேண்டிய ஆதனவரித் தொகை ரூபா 917,747 புத்தகங்களில் பதிவளிப்பு செய்வதற்கு அனுமதியை பெற்றுக்கொள்ளப்படவில்லை.

**(இ)** 2015 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு ரூபா 96,010,102 பெறுமதியாக கிடைக்கவேண்டிய ஆதனவரி வருமானத்தில் 1-10 ஆண்டுகளுக்கான ரூபா 66,612,688 உம் உள்ளடக்கியிருந்தபோதிலும் இந்த மொத்த தொகையை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ)** ஒரு வருடத்தில் இருந்து 10 வருடம் வரைக்கும் அறவிடவேண்டிய ஆதனவரி 66,612,668 வருமானத்தில் 61 வீதம் கந்தல உப அலுவலகத்திற்கும் 24 வீதம் வலிசர உபஅலுவலகத்திற்கும் 16வீதம் பமுனுகம உப அலுவலகத்திற்கும் சொந்தமாக உள்ளன.

**2.3.3 வியாபார வரி**

**(அ)** 2015 டிசம்பர் 31 திகதிக்கு 5 ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்படாத வியாபார வரி நிலுவை ரூபா 243,270 இருந்த போதிலும் 10 வருடத்திற்கு மேற்பட்ட கடந்த நிலுவை ரூபா 204,350 கிடைக்கவேண்டிய தொகை புத்தகங்களில் பதிவளிப்பு செய்வதற்கு அனுமதியை பெற்றுக்கொள்ள கேட்டிருந்தபோதிலும் அனுமதி வழங்கப்பட்டிருக்கப்படவில்லை.

**(ஆ)** கந்தல உப அலுவலகத்திற்கு 5 ஆண்டுகளுக்கு மேலாக கிடைக்கவேண்டிய வியாபார வரி நிலுவை ரூபா 702,460 இல் 1-3 ஆண்டு காலப்பகுதிக்கு கிடைக்கவேண்டிய ரூபா 104,000 நிலுவை காணப்பட்டுள்ளது.

**2.3.4 வாடகைகள்**

கந்தல உப அலுவலகத்தின் சந்தைத் தொகுதியில் 2015 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கிடைக்கவேண்டிய வாடகை நிலுவை ரூபா 6,618,930 உள்ள போதிலும் அந்த நிலுவையில் 1-3 ஆண்டுகளிற்காக 1,009,838 உம், 3-5 ஆண்டுகளுக்கு ரூபா 3,787,673 உம், 5 ஆண்டுகளுக்கு மேலாக ரூபா 919,496 உம் காணப்பட்டுள்ளது.

**2.3.5 வியாபார உரிமங்கள்**

2015 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு கிடைக்கவேண்டிய வியாபார உரிமம் ரூபா 784,805 இல் 10 வருடத்திற்கு மேலாக கிடைக்கவேண்டிய நிலுவை ரூபா 406,000 தொகை பதிவேட்டில் பதிவளிப்பு செய்வதற்கு அனுமதி கோரப்பட்டிருந்தது.

**2.3.6 ஏனைய வருமானம்**

(அ) கந்தல உப அலுவலகத்தில் உள்ள கோபுரத்தில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு அறவிடவேண்டிய ரூபா 74,407 நிலுவை 2013 ஆம் ஆண்டில் இருந்து மீதி கீழ் கொண்டுவரப்படுகின்ற போதும் அதனை அறவிடுவதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 ஏப்ரல் 17 ஆம் திகதிய 1597/8 இலக்கம் ஆகிய இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் விசேட வர்த்தகமானியின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்திற்கு தொடர்புள்ள பிரதேசத்தின் தொலைத்தொடர்பு கோபுரங்களின் கட்டணம் அறவீடு செய்யவேண்டியபோதும் பிரதேச சபைக்கு சொந்தமான பிரதேசத்தில் உள்ள கோபுரங்களுக்கான கட்டணத்தின் வருடாந்த பெறுமதியில் 5 வீதம் மட்டும் அறவிடப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) கணக்குகளின் பிரகாரம் பெறுமதி இனங்கான முடியாத பல வருடங்களிற்கு முன்னர் சபைக்கு சொந்தமான 7 வாகனங்கள் பாவிக்கப்படாமல் உள்ளது. இது திருத்தம் செய்வதற்கு அல்லது அகற்றுவதற்கோ ஏற்பாடு செய்யப்படாமல் ஒவ்வொரு வருடத்தில் அழிவடைந்து செல்கின்றது. இது பற்றி இதற்கு முன்னர் கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிட்டிருந்தபோதும் இயந்திரவியல் பொறியியலாளரால் உதவியை பெற்று மேற்படி நடவடிக்கை எடுக்கவேண்டும் என 2014 இருப்பு கணக்கெடுப்பு அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கந்தல உப அலுவலகத்திற்கு சொந்தமான கிரவலபிட்டிய சந்தைத் தொகுதியில் 13 கடைகள் 2012 ஆம் ஆண்டில் இருந்து மூடப்பட்டிருந்தது.

(இ) 2015 ஆம் ஆண்டில் உள்;ராட்சி, மற்றும் மாகாண சபைகள் அமைச்சிடமிருந்து நன்கொடையாக கிடைத்த ஒரு குறுகப் வாகனமும், டிப்பர் ஒன்றும், பக்கோ லோடர் ஒன்றினதும் உரிமைத்தன்மை கணக்காய்வு திகதி 2015 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரைக்கும் சபைக்கு எடுக்கப்படவில்லை. மற்றும் குறுகப் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டுள்ளது.

(ஈ) 2015 யூலை 02 இல் சபைக்கு நன்கொடையாக கிடைத்துள்ள பக்கோ கணக்காய்வுத் திகதி 2015 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரைக்கும் பயன்படுத்தப்படாமல் உள்ளது.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

**பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.**

**(அ)** சர்வதேச லயன்ஸ் கழகத்தில் 2000 ஆம் ஆண்டில் நன்கொடையாக கிடைத்த ரூபா 2,158,358 பெறுமதியான தீயணைக்கும் வாகனம் 2003 நவம்பர் 5 ஆம் திகதி வெலிசர கடற்படை முகாமிற்கு முறையற்றவாறு கொடுத்திருந்தபோதிலும் கணக்காய்வுத்திகதி 2015 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரைக்கும் இது மீள சபைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மோட்டார் போக்குவரத்து ஆணையாளருடைய பதிவு பற்றி வலையமைப்பில் பார்க்கும் போது அந்த இலக்கத்திற்கு சொந்தமான வாகனம் களனிய பல்கலைக்கழகத்திற்கு சொந்தமானது என கடற்படை தளபதி சபைக்கு அறிவித்திருந்த போதிலும் இவ் தீயணைக்கும் வாகனம் எந்த இடத்தில் உள்ளது என்ற தகவல் கூறப்படமுடியாதுள்ளது.

**(ஆ)** நிதி அமைச்சினால் சபைக்கு வழங்கிய மிற்சுவிசி கப் 1995 யூலை 13 ஆம் திகதி படையினருக்கு எடுக்கப்பட்டு 2008 பெப்ரவரி 2ம் திகதி பாவிக்கமுடியாத நிலைமையில் சபைக்கு மீள வழங்கியிருந்தது. இந்த வாகனத்தின் உரிமை சபைக்கு மாற்றப்படவில்லை. மற்றும் சபை நிதிக் கூற்றுக்களில் நிலையான சொத்தாக காணப்படவில்லை. 2012 ஒக்டோபர் 6 ஆம் திகதி மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு இயந்திரவியல் பொறியியலாளரால் இந்த வாகனம் திருத்தம் செய்வதற்கு அதிகளவான செலவினம் ஏற்படும் என்பதனால் ரூபா 125,000 க்கு விலை மதிப்பீட்டு பெறுமதிக்கு அகற்றுவதற்கும் மற்றும் 2014 இருப்பு கணக்கெடுப்பின் போது இது ஏல விற்பனை செய்யவோ அல்லது திருத்தம் செய்யவோ சிபார்சு செய்யப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி 2015 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரைக்கும் மேற்படி சிபார்சு செயற்படுத்தப்படவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன

**(அ)** 100 நாள் விசேட அபிவிருத்தி திட்டத்தில் ரூபா 34,000,000 க்கு 35 வேலைத்திட்டங்களிற்கு அனுமதி கிடைத்துள்ள போதிலும் அதில் 2 வேலைத்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தது. வேலை நிறைவடைந்த 23 வேலைத்திட்டங்களிற்காக காசு சபைக்கு கிடைத்துள்ளது. ஆரம்பத்தில் 8 வேலைத்திட்டம் இருந்தது. அதில் 2,000,000 பெறுமதியான இருவேலைத்திட்டத்திற்காக ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை.

**(ஆ)** வீட்டுக்கு வீடு கிராமத்திற்கு கிராமம் என்ற திட்டத்தில் கிராமிய பாலங்கள் செய்வதற்காக உள்ள திட்டத்தில் 2014 வருடத்தில் அனுமதி கிடைத்து வேலை நிறைவேற்றப்படாது தொடர்வேலைத் திட்டத்தினால் 2015 ஆம் ஆண்டில் ரூபா 2,577,500 பெறுமதியில் 05 வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தது. ஆயினும் வேலை நிறைவேற்றலிற்கான மீள்நிரப்பல் 2015 திசெம்பர் 31 வரையும் பெறப்பட்டிருக்கவில்லை.

**(இ)** உள்;ராட்சி அமைச்சினால் 2014 நவம்பர் 16 ஆந் திகதி வழங்கப்பட்ட கல்வனைஸ் பைப் 340 சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதும் 2015 ஜனவரி 12 திகதியில் 200 கல்வனைஸ் பைப் ரூபா 465,000 க்கு கொள்வனவு செய்திருந்தது.

**(ஈ)** 2015 டிசம்பர் 31 ம் திகதிக்கு பௌதீகமாக 13 சபையினுள் இல்லாத ரூபா 2,273,896 பெறுமதியான 13 வாகனங்கள் சம்மந்தமாக கணக்கெடுப்பு சபையை நியமித்து அவர்களால் சிபார்சு செய்து கணக்குகளில் பதிவளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 3.4 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

**(அ)** சந்தைத் தொகுதியில் உள்ள மண்டபத்திற்காக கிடைக்கவேண்டிய வாடகை ரூபா 974,800 க்கு கொடுத்த காசோலை 2009 யூன் 09 ஆந் திகதியில் மறுக்கப்பட்டிருந்த போதிலும் அது சம்மந்தமாக கணக்காய்வு திகதியில் 2016 மார்ச் 31 வரைக்கும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**(ஆ)** வத்தளை பிரதேசத்தில் உள்ள வீதி 1808 வீதிகள் காதல, வலிசர, பவுனுகம ஆகிய பிரதேசத்திற்காக பதிவு செய்திருந்தன. இந்த வீதிகள் கிறவல் வீதி, கொங்கிரீட் வீதி மற்றும் தார் வீதி என்றவாறு பிரித்து இனங்காணப்படவில்லை. மற்றும்

2014 - 2015 ஆண்டுகளில் வீதிப்பதிவேட்டில் பதியப்படவில்லை. வீதிகள் வர்த்தகமானியில் பிரசுரிப்பதற்கான முன்மொழிவு 2013 நவம்பர் 06 ஆந் திகதி ஏற்றுக்கொண்ட போதிலும் பவுனுகம உப அலுவலகத்திற்கு சொந்தமான எல்லையை வர்த்தகமானியில் பிரசுரிக்க உள்ள 13 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள 524 வீதிகள் வர்த்தகமானியில் பிரசுரித்து சபைக்கு சொந்தமாக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 திண்மக் கழிவு முகாமைத்துவம்

மீளாய்வாண்டில் குப்பைகள் அகற்றுவதற்காக ரூபா 170,040,180 தொகை கொடுப்பனவு செய்திருந்தது. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

**(அ)** சபை எல்லையில் ஒருநாளைக்கு 15-16 தொன் குப்பைகள் சேகரிப்பதுடன் எரி வாயு அலகிற்கு 5-6 தொன் குப்பைகள் கொடுக்கப்பட்டிருந்தது.

**(ஆ)** 2002 ஆண்டில் நேட் நிறுவனத்தில் தொன் 8 இயலளவில் உள்ள எரிவாயு செய்யும் அலகு நிர்மானிக்கப்பட்டிருந்தும் இத்திட்டம் அதிக காலமாக பயன்படுத்தப்பட்டிராது இருந்தது.

**(இ)** சபைச்செயலாளர் நகர சபை திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்காக மலேசியாவில் பயிற்சித்திட்டத்திற்கு விஜயம் மேற்கொள்வதற்காக சபை நிதியில் ரூபா 130,000 தொகை செலவு செய்திருந்தது. பெற்றுக்கொண்ட அறிவு, மற்றும் அனுபவம் ஆகியன மூலம் சபைக்கு நன்மை கிடைத்ததா என்பது பற்றி உறுதி செய்யப்படமுடியாதிருந்தது.

**(ஈ)** அவரகொட்டுவ கன்தல காணிக்கு 6 உழவு இயந்திர லோட் இறுதியாக குப்பைக்கள் போடப்படும் மற்றும் இந்த காணி கிராமத்தில் இருப்பதனால் அக்கிராமங்களின் எதிர்ப்பு இருந்த போதும் இக்குப்பைகள் போடப்படுகின்றன. அதில் குப்பைகள் உரம் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ)** 2011 யூலை 5ம் திகதி இலக்கம் 1713/11 விசேட வர்த்தகமானி அறிவித்தலின் ஐ (அ) பிரிவின் பிரகாரம் திண்மக்கழிவு முகாமைத்துவத்தின் கட்டளையின் உப பிரிவுப் பிரகாரம் சபையினால் செய்ய வேண்டிய வேலைகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------------------

பின்வரும் விடயங்களில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

அ. பாதீட்டு கட்டுப்பாடு
ஆ. வருமான நிர்வாகம்
இ. சொத்து முகாமைத்துவம்
ஈ. ஒப்பந்தக் கட்டுப்பாடு
உ. திண்மக்கழிவு முகாமைத்துவம்